செய்தி குறிப்பு எண்–111 நாள்–14.8.2007

**<u>தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும்</u>**
**<u>இந்திய சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி</u>**

* * * * * * * *

**இன்று நமது நாட்டின் வீர சுதந்திரத் திருநாள் நாடு முழுவதிலும் மிகுந்த எழுச்சியுடனும், நிறைந்த மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படுகிறது. இத்திருநாளில் தமிழக மக்கள் அனைவருக்கும் என் இனிய இதயம் கனிந்த சுதந்திரத் திருநாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.**

**இத்திருநாளில் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகாலச் சுதந்திரப் போரில் தங்கள் இன்னுயிரை ஈந்தும், சிறைக்கொடுமைகளுக்கு ஆளாகிச் சித்திரவதைகளைச் சுமந்தும், சொல்லொணாத் துன்ப துயரங்களுக்கு உட்பட்டும் மாண்டு மடிந்துபோன நமது வீரத் தியாகிகளை நினைந்து வணங்கி நமது நன்றி மலர்களால் காணிக்கைகளைச் செலுத்திடுவோம்!**

நமது நாடு பெற்ற சுதந்திரத்தின் பயன்களாக பல்வேறு துறைகளிலும் நாம் வளர்ச்சி பெற்றுள்ளோம். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மாடமாளிகைகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகள், விவசாய வளம்பெருக்கும் அணைக்கட்டுகள், நாடு முழுவதும் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிடும் பல்வேறு நெடுஞ்சாலை வசதிகள், குக்கிராமங்களைத் தொடர்புபடுத்தும் இணைப்புச் சாலைகள், மூலைமுடுக்குகளிலும் வண்ணவண்ணமாய் ஒளி வீசி இருள் பகைவனை விரட்டிடும் மின்வசதிகள், கோடிக்கணக்கான ரூபாய் முதலீடுகளில் அமைந்த இரும்பு எஃகு, கனிம வள, அணுசக்தித் தொழிற்சாலைகள், வேலை வாய்ப்புகளை வாரி வழங்கிடும் தகவல் தொழில்நுட்பத் தொழிற் பூங்காக்கள் பெருகியுள்ளன; தொடர்ந்து பெருகி வருகின்றன.

நமது நாட்டின் உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கிடும் தரமான கல்வி வாய்ப்புகள் மூலம் அறிவும் ஆற்றலும் நிறைந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பார் முழுவதும் பரவி நமது நாட்டின் மனித வளத்தினைப் பறை சாற்றுகின்றனர். இவை எல்லாம் நமது சுதந்திரம் நமக்குப் பெற்றுத் தந்துள்ள பயன்களாகும்.

சுதந்திரத்தின் இத்தகைய பயன்கள் வளம் பெற்றவர்களுக்கு மட்டுமில்லாமல் ஏழை எளியவர்களுக்கும் நலிந்தவர்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, வண்ணத் தொலைக்காட்சி இல்லாத குடும்பங்களுக்கெல்லாம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் மூன்று முறை முட்டைகள், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள், கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறு

**மாதங்களுக்கு ஆறாயிரம் ரூபாய் நிதியுதவி, நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச நிலம், வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், உடல் உழைப்புத் தொழிலாளர்களாக இந்த நாட்டை வளப்படுத்தி வரும் பல்வேறு அமைப்பு சாராத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்குப் பல்வேறு வகையிலும் பாதுகாப்பளித்திடும் நிதி உதவிகள், ஆதரவற்ற முதியோர், விதவைப் பெண்கள், உடல் ஊனமுற்றோர் என அனைவருக்கும் உதவித் தொகைகள் என இந்த அரசினால் தாராளமாக வழங்கப்படுகின்றன; ஏழை எளியோர் வாழ்வில் வளமும் வலிமையும் சேர்க்கப் படுகின்றன. இத்தகைய பயன்கள் தொடர வேண்டும்; தொடர்ந்து வளம் பெருகிட வேண்டும்; ஏழ்மை முற்றிலும் விரட்டப் பட்டாக வேண்டும். இந்த உணர்வோடு சாதி சமய வேறுபாடுகள் என்னும் தளைகளை அகற்றி ஒன்றுபடுவோம், உழைப்போம், முன்னேறுவோம் என இந்நாளில் உறுதியேற்போமாக.**

*******

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.